(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 26.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 மே 24, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2622/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2691/2023

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாயிகளினால் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகளினதும் களைநாசினிகளினதும் விலை மிக உயர்வாக உள்ளது என்பதையும்;

(ii) அவை சரியான தரத்தில் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிருமி நாசினிகள் மற்றும் களை நாசினிகளை இறக்குமதி செய்யும்போது ஒழுங்குறுத்துகைப் பணிகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) கிருமி நாசினிகள் மற்றும் களை நாசினிகளின் பயன்பாடு தொடர்பில் விவசாய வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஊடாக விவசாயிகளை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) விவசாய இரசாயனப் பொருட்களை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2843/2023

கௌரவ யூ.கே.சுமித் உடுகும்புர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் "சிரம சுவ ரெக்கவரண' சுகாதார காப்புறுதித் திட்டம் நடைமுறைபடுத்தப்படுகின்றதா;

(ii) மேற்படி காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்கள் உரித்தாகும் தரப்பினர்கள் யாவர்;

(iii) ஒரு பயனாளிக்காக செலுத்தப்படும் அனுகூலத் தொகை எவ்வளவு;

(iv) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி காப்புறுதித் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்டுள்ள அனுகூலத் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2878/2023

கௌரவ யதாமிணீ குணவர்தன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருமளவிலான இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளதோடு, சாதாரணமாக ஒருவர் இலங்கைக்கு அனுப்புகின்ற நிதித் தொகையானது, கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்ததை விட தற்போது அதிகரித்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்வாறு எண்ணிக்கையில் அதிகளவான இலங்கைத் தொழிலாளர்கள் இருக்கின்ற பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இவ்வாறு அதிகூடிய இலங்கை தனிநபர் பணவனுப்பல் சராசரி பெறுமதிகளைக் கொண்டுள்ள பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) அவ்வாறே ஒட்டுமொத்தமாக, அதிகூடிய பணவனுப்பல்களை மேற்கொள்கின்ற பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(v) மேற்படி நாடுகளிலிருந்து அல்லது நகரங்களிலிருந்து பணம் அனுப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கியொன்றில் அல்லது நிதி நிறுவனமொன்றில் வசதிகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

2933/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓமான் மற்றும் துபாய் போன்ற நாடுகளுக்கு இலங்கைப் பெண்களை கொண்டு செல்லும் மனித வியாபாரம் இடம்பெறுவதை அறிவாரா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வியாபாரத்துடன் மேற்படி நாடுகளில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கைத் தூதரக பணியாளர்களும் தொடர்புபட்டுள்ளதாக தகவல் வெளிக்கொணரப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு பணியாளரினதும் பெயர், பதவி மற்றும் சேவை நிலையம் யாதென்பதையும்;

(iv) மேற்படி பணியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்கள் மற்றும் அந்நாடுகளில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் பணியாளர் களுக்குமிடையில் நல்லுறவை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

2968/2023

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ தேர்தல்கள் நடைபெற்ற திகதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றி பெற்று தொடர்புடைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர், முகவரி மற்றும் பதவிப் பெயர் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நபர்களுக்கான சம்பளம், கொடுப்பனவுகள், எரிபொருள் மற்றும் பிற வசதிகளுக்காக உறப்பட்ட செலவுகள் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நபர்களுக்காக உறப்பட்ட அத்தகைய செலவினங்களுடன் ஒப்பிடுகையில், கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்காக அவர்களிடமிருந்து கிடைத்துள்ள பங்களிப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

3075/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் புகையிரத வீதிகளின் மொத்த நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) கரையோர வீதி, பிரதான வீதி, களனிவெளி வீதி மற்றும் புத்தளம் வீதி ஆகிய ஒவ்வொரு புகையிரத வீதியினதும் நீளம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு புகையிரத வீதியிலும் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி பாதுகாப்பற்ற புகையிரத வீதி கடவைகளை பாதுகாப்பான புகையிரத வீதி கடவைகளாக மாற்றுவதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

3091/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் புகையிரத நிலையங்களின் பெயர்கள் யாவை;

(ii) மிகச் சிறந்த புகையிரத சேவையினை பேணிச் செல்வதற்காக புகையிரத நிலைய அதிபர்களின் சேவை இன்றியமையாதது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) இறுதியாக புகையிரத நிலைய அதிபர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ள திகதி யாது;

(iv) இலங்கை புகையிரத திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள புகையிரத நிலைய அதிபர்களின் எண்ணிக்கை யாது;

(v) புகையிரத நிலைய அதிபர் பதவியில் தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(vi) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

3104/2023

கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நியமனங்கள் எவ்வடிப்படையில் வழங்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆசிரிய உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரியர் சேவையின் 3(I) ஆம் தரத்தின் (ஆ) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்குகையில் தொண்டர் ஆசிரியர்களாக 2013.07.01 ஆந் திகதி தொடக்கம் 2018.08.01 ஆந் திகதி வரை சேவையாற்றிய காலப்பகுதி இவர்களின் சேவைக்காலத்துக்கு சேர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட திகதியினை இவர்களின் ஆசிரியர் சேவையின் ஆரம்ப நியமனத் திகதியாக கருதுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

3153/2023

கௌரவ தவராஜா கலை அரசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளரின் 2020.06.25 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கல்முனை கல்வி வலயத்தின், கல்முனை, கமு/கமு/உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் தொழில்நுட்பக் கல்விக்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு நிதி ஏற்பாடுகளும் ஒதுக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி கட்டிட நிர்மாணத்திற்காக அப்பாடசாலையின் கணினி அறை மற்றும் ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் முறையான அனுமதியின் கீழ் அகற்றப்பட்டன என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பாடசாலையில் தொழில்நுட்ப பாடநெறியைப் பயில்வதற்கு புதிய அல்லது பழைய கட்டிடமொன்று இல்லை என்பதால் மாணவர்கள் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இதுவரையும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் தற்போதைய நிலை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 மே 17 ஆம் திகதிய 2332/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி தற்போதைய தலைவர் மற்றும் உறுப்பினர் திரு. ஜே.டபிள்யு.எம்.ஜே.பி.கே. ரட்நாயக்கவை அந்த உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கான உரை,— 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி,

தற்போதைய தலைவர் மற்றும் உறுப்பினர் திரு. ஜே.டபிள்யு.எம்.ஜே.பி.கே. ரட்நாயக்க, மேற்படி சட்டத்தின் பிரிவு 7(அ) (iii) மற்றும் பிரிவு 7(அ)(V) இன் கீழ் தலைவர் பதவி மற்றும் உறுப்புரிமையில் தொடர்ந்திருக்கத் தகுதியற்றவர் என, 2023 மே 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின் 2023 ஏப்ரல் 18 ஆம் திகதிய அறிக்கையானது தெரிவித்துள்ளதனால், மேற்படி சட்டத்தின் பிரிவு 7(இ) இன் நியதிகளுக்கமைய திரு. ஜே.டபிள்யு.எம்.ஜே.பி.கே. ரட்நாயக்கவை அந்த ஆணைக்குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ், புறப்படுகை வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 22 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/80 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய 2312/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 பெப்ரவரி 10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமான 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டதும், 2023.05.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 75(1) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6(3)(அ) மற்றும் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 117(2) மற்றும் 117(3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 02 ஆம் திகதிய 2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2இ, 5 மற்றும் 5அ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக் கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2292/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*18.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்,— குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 52 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

கமத்தொழில் அமைச்சர்,— இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இலக்கம் 2 ஆம் பகுதியின் 23 ஆம் பிரிவின் கீழ் 2022.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஹதபிம அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*22.

கமத்தொழில் அமைச்சர்,— இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இலக்கம் 2 ஆம் பகுதியின் 23 ஆம் பிரிவின் கீழ் 2022.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஹதபிம அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*23.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*24.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் வருடாந்த அறிக்கை (2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*25.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*26.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*27.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

28.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.
பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.
மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.
பலப்பிட்டிய ஸ்ரீ ராஹுலாராம புராண விஹாரஸ்த்த சாமனேர ஆகல்ப சங்வர்தன பிக்ஷு கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.